1969 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப் பற்றி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அந்த தேவஸ்தானத்தை அணுகினார்களா என்று தெரியவில்லை. அணுகியிருந்தாலும், இல்லாவிட்டாலும் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

அரசு பொது மருத்துவ மனையில் நிலைய மருத்துவ அதிகாரி.

***440 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார. அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மத்திய மருத்துவ மனையில் (ஜெனரல் ஆஸ்பத்திரி) ஆர்.எம்.ஓ. எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தமிழ்நாடு மருத்துவ மனையில் உள்ள சிவில் மருத்துவ அதிகாரிகள் சென்னை, அரசு பொது மருத்துவமனையில் நிலைய மருத்துவ அதிகாரியாக (R.M.O.) நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : : மருத்துவ மனையில் இருக்கும் ஆர்.எம்.ஓ.க்கள் நிர்வாகத்தையும் பார்த்துக்கொள்ள வேண்டும். மருத்துவத் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். ஸ்டோரில் இருக்கும் விலை உயர்ந்த மருந்துகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் விதி இருக்கிறது. அதை மாற்றியமைக்கும் வகையில் நிர்வாகத்தைப் பொருத்தவரை ஒரு நிர்வாக அதிகாரியைப் போடவும், மெடிகல் ஸ்டோர்சைப் பொருத்தவரை சூப்பரின்டென்டெண்ட் ஒருவரைப் போடவும், மருத்துவம் சம்பந்தப்பட்ட மட்டில் ஆர்.எம்.ஓ. பணி என்றும் பிரித்து அமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆர்.எம்.ஓ. பதவியில் இருப்பவர்கள் நிர்வாகத்திலேதான் இருக்கலாமே தவிர, தனியாக மருத்துவ (பிரைவேட் பிராக்டீஸ்) பார்க்க முடியாது. கனம் உறுப்பினர் அவர்கள்கூறிய யோசனைகளில் ஏதேனும் எடுத்துக்கொள்ளலாமா என்று பரிசீலிக்கலாம். தற்போதுள்ள முறையில் ஆர்.எம்.ஓ. நிர்வாகதிலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது.

திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: அரசாங்க மருத்துவ மனையில் மருத்துவம் செய்கிற டாக்டர்கள் எத்தனை ஆண்டுக் காலம் வரை தொடர்ந்து ஒரே மருத்துவ மனையில் பணியாற்றலாம் ? சில மருத்துவ மனைகளில் ஏழாண்டுகள் பத்தாண்டுகளுக்கு மேலும் பணியாற்றுகின்ற நிலைமை இருக்கிறதே · ஒரு இடத்தில் இத்தனை ஆண்டு காலந்தான் பணியாற்ற வேண்டும் என்ற நிர்ணயம் இருக்கிறதா ? அப்படி ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பவர்கள் மாற்றப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதற்கான வரையறை இருக்கிறது. நிர்வாக முறைப்படி பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பணியாற்றக்கூடியவர்கள் மூன்றாண்டு காலம் பணி புரிய வேண்டுமென்று விதி இருக்கிறது. கணவன் மனைவி இருவரும் மருத்துவர்களாக இருப்பார்களானால், அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் வாழ வேண்டுமென்ற நிர்ப்பந்தம் காரணமாக மாற்றம் ஏற்படக் கூடாது என்று விரும்புகிறார்கள். இதிலே பல சிக்கல்கள் இருப்பதால், சட்டப்படி கவனிக்காமல் மனிதாபிமானத்தோடு கவனித்து, கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்க வேண்டும், பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற முறையில் மாற்றம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதோடு, அந்த வட்டார மக்களுக்குப் பிடித்துவிட்ட காரணத்தால், மருத்துவர்களை மாற்றக் கூடாது என்று கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களே அடிக்கடி வந்து டாக்டர்களை மாற்றக் கூடாது என்று கூறுகிறார்கள், அவர்கள் மாற்றப்பட வேண்டுமென்று சட்டம் இருந்தும் இவற்றை எல்லாம் உத்தேசித்து நடைமுறையில் மாற்றுவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

திரு வி. கே. கோதண்டராமன் : ஆர்.எம்.ஓ.க்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆரம்பத்திலேயே சொன்னேன். சிவில் சர்ஜன், பஸ்ட் கிளாஸ் அதிகாரிகளாக இருப்பவர்கள்தான் ஆர்.எம்.ஓ.க்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : மாவட்ட மருத்துவ அதிகாரிகளாக இருப்பவர்களை ஆர்.எம்.ஓக்களாக நியமிப்பதாகத் தெரிகிறது. இவர்கள் சீனியாரிடி அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா அல்லது திறமையின் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கொஞ்சம் உயர்ந்த பதவியாக இருக்கும் காரணத்தால் நீண்டகால அனுபவம், திறமை இவைகளை எல்லாம் அனுசரித்துத்தான் பதவியில் அமர்த்தப் படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, may I know from the Hon. Minister whether the R.M.O. of the Madras General Hospital is in charge of only administrative activities inside the hospital or is he also in charge of the distribution of medicines as well as in charge of stores and if so, will the Government be pleased to determine the special duties which have to be done by this officer ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ; என்னிடத்திலே இருக்கும் குறிப்பின்படி **He was posted to the administrative side as R.M.O.** என்று இருக்கிறது. நிர்வாகத்திற்காகத்தான் இப்போது ஆர்.எம்.ஓ. போடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி கட்டடம்.

***441 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டிலுள்ள மருத்துவக் கல்லூரியை இட வசதிக் குறைவால் வேறு இடத்திற்கு மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Hosur Government Hospital.

***442—*Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :**

(*a*) whether there is any proposal to increase the bed strength in the Hosur Government Hospital ; and

(*b*) if so, when it will be implemented ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1970–71-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ள **உத்தேசம் இருக்கிறது.**